மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சாத்தூர்

அ.வ.எண். 68/2021

பெயர் – ராஜாராம் (வா.சா.1)

நாள் – 05.04.2023

பிரதிவாதி தரப்பில் கு.வி.

எனது தகப்பனார் பூல்ராஜ் இறந்து எத்தனை ஆண்டுகள் ஆகிறது என்றால் 23.5.2021ம் தேதி இறந்தார். எனது நிருபண உறுதிக்கூற்றில் 2,3 பிரதிவாதிகள் என்ன படித்துள்ளார்கள் என்று சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். எனது நிருபண உறுதிக்கூற்றில் எனது தகப்பனார் தனது இறப்பு வரை 1 முதல் 3 பிரதிவாதிகளுடன் வாழ்ந்து வந்துள்ளதாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். எனது நிருபண உறுதிக்கூற்றில் எனது தகப்பனார் எனது தாயாரை 45 ஆண்டுகாலமாக புறக்கணித்துவிட்டு 1 முதல் 3 பிரதிவாதிகளுடன் வாழ்ந்து வந்ததாக சொல்லியுள்ளேன் என்றால் இல்லை. எனது நிருபண உறுதிக்கூற்றில் எனது தகப்பனார் எனது தாயாரை 45 ஆண்டுகாலமாக புறக்கணித்துவிட்டு 1 முதல் 3 பிரதிவாதிகளுடன் வாழ்ந்து வந்ததாக சொல்லியுள்ளேன் என்றாலும் வழக்கிற்காக அவ்வாறு சொல்லவில்லை என பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எனது நிருபண உறுதிக்கூற்றிலும், பிராதிலும் 1 முதல் 3 பிரதிவாதிகள் எனது தகப்பனாரின் வயோதிகத்தை பயன்படுத்தி எனது தகப்பானர் பெயரில் இருந்த சொத்துக்களை அவர்கள் பெயரில் மாற்ற முயற்ச்சித்ததாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். 2,3 பிரதிவாதிகள் என்ன படித்துள்ளார்கள் என்றால் ராமுத்தாய் B.Sc. B.Ed., ராமலட்சுமி 2ம் நிலை டீச்சர் டிரைனிங் படித்துள்ளார். 2,3 பிரதிவாதிகளுக்கு திருமணம் ஆகிவிட்டது என்றால் சரிதான். 2,3 பிரதிவாதிகள் சமூகத்தில் நல்ல அந்தஸ்தில் உள்ளார்கள் என்றால் சரிதான். ஆனால் ராமலட்சுமி அவரது தகப்பனாரின் சம்மதம் இல்லாமல் திருமணம் செய்து கொண்டுள்ளார். 2,3 பிரதிவாதிகள் எனது தகப்பனாரின் சொத்துக்களை அடையவேண்டும் என்ற கெட்ட எண்ணத்தில் செயல்பட்டதாக வழக்கிற்காக எனது நிருபண உறுதிக்கூற்றில் சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. 2,3 பிரதிவாதிகள் சமூகத்தில் நல்ல அந்தஸ்தில் உள்ளார்கள் என்றாலும், அவர்களுக்கு எனது தகப்பனாரின் சொத்துக்களை அடைய வேண்டும் என்ற கெட்ட எண்ணம் கிடையாது என்றால் சரியல்ல. எனது பிராதிலும் , நிருபண உறுதிக்கூற்றிலும் எனது தகப்பனார் 2,3

பிரதிவாதிகளுக்கு சொத்துக்களை மாற்றி கொடுக்காத காரணத்தினால் எனது தகப்பனாருக்கு உணவு கொடுக்காமலும், பராமரிக்காமலும் இருந்ததாக நான் வழக்கிற்காக பொய்யாக சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. நான் சொல்வதுபோல் 2,3 பிரதிவாதிகள் எனது தகப்பனாரை பராமரிக்காமல் இருந்ததில்லை என்றாலும் எனது தகப்பனாரின் இறப்பு வரை 2,3 பிரதிவாதிகள் எனது தக்பபனாரை நல்லமுறையில் பராமரித்தார்கள் என்றால் சரியல்ல. எனது தகப்பனாரின் மருத்துவ செலவிற்காக ரூபாய் இரண்டு லட்சம் செலவு செய்ததாக எனது நிருபண உறுதிக்கூற்றில் சொல்லியுள்ள நிலையில் எதற்காக செலவு செய்தேன் என்றால் எனது தகப்பனாரின் கால்முறிந்து ஆபரேசன் செய்வதற்காக செலவு செய்தேன். அவ்வாறு செலவு செய்ததற்கான மருத்துவ ரசீதுகளை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டதற்கான ஆவணத்தை கொடுத்துள்ளேன். மெடிக்கல் பில்களை தாக்கல் செய்யவில்லை. எனது தகப்பனாரை எந்த மருத்துவமனையில் அனுமதித்திருந்தேன் என்றால் செந்தில் மருத்துவமனை அனுமதித்து மருத்துவர் செந்தில்குமார் அறுவை சிகிச்சை செய்தார். 2 வது முறையும் விழுந்து எனது தகப்பனாருக்கு கை, கால் வராமல் இருந்தபோதும் அவரை அதே மருத்துவமனையில் அனுமதித்தேன். 2 வது முறை விழுந்தது சம்பந்தமான எனது தகப்பனாருக்கான மருத்துவ ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். எனது தகப்பனார் எத்தனை நாட்களாக உள்நோயாளியாக மருத்துவமனையில் சிகிச்சை பெற்றார் என்றால் 10 நாட்களாக உள்நோயாளியாக இருந்து சிகிச்சை பெற்றார். நான் என்ன வேலை செய்கிறேன் என்றால் தனியார் பள்ளியில் முதுநிலை ஆசிரியராக உள்ளேன். எனது தகப்பனார் உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்தபோனது எனது தகப்பனாருடன் நான் இருந்து பார்த்துக்கொண்டேனா என்றால் பார்த்துக்கொண்டேன். எனது தகப்பனார் எப்போது உள்நோயாளியாக இருந்தார் என்றால் பிராதில் சொல்லியுள்ளேன். சம்மரி கொடுத்துள்ளேன். 2020 ம் ஆண்டு உள்நோயாளியாக இருந்தார். எனது தகப்பனாருக்கு கால் முறிவு ஏற்பட்டு உள்நோயாளியாக சிகிச்சை பெற்று நான் சொல்வதுபோல் எந்த சம்பவமும் நடைபெற வில்லை என்றாலும், எனது தகப்பனாரை நான் கவனித்துக்கொண்டதாக நான் வழக்கிற்காக சொல்வது பொய் என்றாலும் சரியல்ல.

உண்மையிலேயே எனது தகப்பனாருக்கு இரண்டு லட்சம் ரூபாய் செலவு செய்து சிகிச்சை அளித்திருந்தால் அதற்கான ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருப்பேன் என்றாலும் அவ்வாறு யாதொரு சம்பவமோ நடைபெறாத காரணத்தினால் தான் அதற்கான ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. எனது தகப்பனார் மருத்துவமனையில் இருந்து விடுவிக்கப்பட்டபின்பு அவரை நான் எங்கு வைத்து பார்த்துக்கொண்டேன் என்றால் சாத்தூரில் உள்ள எனது வீட்டில் வைத்து பார்த்துக்கொண்டேன். 27.1.2020ம் தேதி ராமுத்தாய் எனது தகப்பனாரை ஆட்டோவில் தூக்கி சென்றுவிட்டார். நான் பள்ளிக்கு சென்றபின் என் தகப்பனாரை யார் பார்த்துக்கொள்வார்கள் என்றால் அதற்காக ஆள்வைத்திருந்தேன். இந்த விவரத்தை பிராதிலும், நிருபண உறுதிக்கூற்றிலும் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். 27.1.2020ம் தேதி ராமுத்தாய் எனது தகப்பனாரை ஆட்டோவில் கூட்டி சென்றதாக சொல்லியுளட்ள நிலையில் அதுசம்பந்தமாக காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேனா என்றால் அம்மாபட்டி காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன். புகார் கொடுக்க யார் யாரெல்லாம் சென்றோம் என்றால் நான் மட்டும் தான் சென்றேன். புகார் கொடுத்த புகார் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டதா என்றால் காவல் துறையினர் விசாரணை செய்து எனது தகப்பனார் என்னுடன் வந்தால் அழைத்து செல்லலாம் என்றும், இல்லை என்றால் ஊரிலேயே எனது சித்தி ராஜம்மாளுடன் இருந்து கொள்ளலாம் என்று சொல்லிவிட்டார்கள். நான் எனது தகப்பனாரை அழைப்பதற்காக சுந்தரகுடும்பன்பட்டிக்கு சென்றேனா என்றால் நான் போகவில்லை, காவல் துறையினர் தான் போனார்கள். காவல் துறையினர் எனது தகப்பனாரை கேட்டதற்கு அவர் என்னுடன் வரமறுத்துவிட்டார் என்றாலும் சரிதான். சுந்தரகுடும்பன்பட்டியில் வசதியாக இருப்பதால் வரமறுத்துவிட்டார். பிரதிவாதிகள் எனது தகப்பனாரை கூட்டி சென்றதாக புகார் கொடுத்து அதன் அடிப்படையில் கொடுத்த சிஎஸ்ஆரை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. சாட்சி மீண்டும் தாக்கல் செய்துள்ளதாக சாட்சியம் அளிக்கிறார். நான் சொல்வதுபோல் ஒரு சம்பவமே நடைபெற வில்லை என்றாலும், நான் வழக்கிற்காக எனது தகப்பனாரை பிரதிவாதிகள் கூடடி சென்றதாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. பிரதிவாதிகள் எனது தகப்பனாரை தூக்கி சென்று என்னை பார்க்கவிடாமல் தடுத்ததாக

வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. உண்மையிலேயே எனது தகப்பனார் மீது பாசம் இருந்திருந்தால் நான் காவல் துறையினர் பிரதிவாதிகள் மீது நடவடிக்கை எடுக்காத போதும் அவர்கள் மீது தனிப்புகார் தாக்கல் செய்திருப்பேன் என்றாலும், அவ்வாறு இல்லாத காரணத்தினால்தான் நான் எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றாலும் சரியல்ல. எனது தகப்பனாரின் இறப்பை பயன்படுத்தி கொண்டு அவர்க்கு பாத்தியப்பட்ட சொத்துக்களை அபகரிக்கவேண்டும் என்ற எண்ணத்தோடு இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எனது நிருபண உறுதிக்கூற்றில் பிரதிவாதிகள் எனது தகப்பனாரை அனாதையாக விட்டுவிட்டு சென்றாக சொல்லியுள்ள நிலையில் அந்த விவரம் எனக்கு எவ்வாறு தெரியவந்தது என்றால் எனது தங்கை ராமலட்சுமி போன் செய்து சொன்னார். அந்த ஊரில் உள்ள எனது சித்தி மலரிவிழி சொன்னார். எனது நிருபண உறுதிக்கூற்றில் நான் சொல்லியுள்ள சங்கதிகள் பொய் என்றாலும் பிரதிவாதிகள் எனது தகப்பனாரை அவரது இறப்பு வரை நன்கு பார்த்துக்கொண்டார்கள் என்றாலும் சரியல்ல. எனது நிருபண உறுதிக்கூற்றில் எனது தகப்பனார் கடந்த 2019ம் ஆண்டிலிருந்து சுயநினைவை இழந்து தன்னை தானே பராமரிக்க முடியாத நிலையில் இருந்ததாக நான் சொல்வது பொய் என்றாலும் சரியல்ல. எனது தகப்பனாரின் மனநிலை குறித்து நான் சொல்லியுள்ள சங்கதியை நிரூபிக்கும் விதமாக மருத்துவ சான்றிதழை தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். எனது நிருபண உறுதிக்கூற்றில் எனது தகப்பனார் எவ்வித உதவியும் இன்றி தனிமையில் வசித்ததாக வழக்கிற்காக பொய்யாக சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல.

குறுக்கு விசாரணையின் தொடர்ச்சிக்காக ஒத்தி வைக்கப்படுகிறது.